### மூத்த பத்திரிகையாளர்கள் சித்தார்த் வரதராஜன் – கரண் தாப்பாவுக்கு அசாம் காவல்துறை அழைப்பாணை!

# கேள்வி கேட்பதே தேச துரோகமாகக் கருதப்பட்டால் மக்களாட்சி பிழைக்க முடியாது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் கண்டனம்!

சென்னை, ஆக. 21 -

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு :-

**‘தி வயர்’ ஊடகத்தைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர்கள் சித்தார்த் வரதராஜன் மற்றும் கரண் தாப்பர் ஆகியோருக்கு அழைப்பாணை விடுத்துள்ள அசாம் மாநிலக் காவல்துறையின் நடவடிக்கைக்கு எனது வன்மையான கண்டனங்கள்.**

**இதுதொடர்பான மற்றொரு வழக்கில் சில நாட்களுக்கு முன்புதான், உச்சநீதிமன்றம் கைது நடவடிக்கைக்குத் தடை விதித்து உத்தரவிட்டிருந்த நிலையில், இந்த அழைப்பாணைகள் அனுப்பப்பட்டுள்ளன. அதுவும் முதல் தகவல் அறிக்கையின் படியையோ, வழக்கின் விவரங்களையோ வழங்காமல், வெறுமனே கைது மிரட்டல் மட்டும் விடுக்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட தேச துரோகப் பிரிவுக்கு மாற்றாகவே BNS பிரிவு 152 சுதந்திரமான பத்திரிகைத் துறையைக் கட்டுப்படுத்தத் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது.**

**கேள்வி கேட்பதே தேச துரோகமாகக் கருதப்பட்டால் மக்களாட்சி பிழைக்க முடியாது!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கழகப் பொருளாளர் – மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியாரும், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி. ரேணுகாதேவி அவர்கள் மறைவுற்ற செய்தி அறிந்து மக்கள் நீதி மய்யத் தலைவர் கமலஹாசன் எம்.பி. அவரது இல்லத்திற்கு நேரில் சென்று துணைவியாரை இழந்து வாடும் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களுக்கும், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவுக்கும் ஆறுதல் கூறினார். உடன் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன் உள்ளார்.

### கூட்டாட்சியியலுக்கு எதிரான போக்கு – எதேச்சதிகாரத்தை எதிர்த்து நிற்கக் கூடியவர்!

# குடியரசு துணைத் தலைவர் வேட்பாளர் - சுதர்சன் ரெட்டி சரியான தேர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக.21-**

**‘இந்தியா’ கூட்டணி சார்பில், குடியரசு துணைத் தலைவர் வேட்பாளராக நீதியரசர் சுதர்சன் ரெட்டியை தேர்வு செய்ததை வாழ்த்தி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :**

இந்தியா கூட்டணி சார்பில் குடியரசுத் துணைத் தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள சுதர்சன் ரெட்டி அவர்களுக்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துகள்.

நேர்மையாகவும் சுதந்திரமாகவும் செயல்பட்டு, குடிமக்களின் உரிமைகள் மற்றும் சமூகநீதியை உயர்த்திப் பிடித்த நீதியரசராக விளங்கிய அவர், தமது பணிக்காலம் முழுவதும் அரசியலமைப்புச் சட்டத்தின் விழுமியங்களைப் போற்றிப் பாதுகாத்தவர் ஆவார். நமது நாட்டின் அமைப்புகளெல்லாம் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் சூழலில், சுதர்சன் ரெட்டி அவர்களை வேட்பாளராக்கியதன் மூலம், மக்களாட்சியையும் அரசியலமைப்பின் விழுமியத்தையும் பாதுகாப்பதில் நமது ஒருமித்த உறுதிப்பாடு வலுப்படுகிறது.

சுதந்திரமாகச் செயல்பட்டு, இந்திய மக்களாட்சியைப் பாதுகாக்க வேண்டிய தன்னாட்சி அமைப்புகள் அத்தனையும் பா.ஜ.க.வின் துணை அமைப்புகளாக மாற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டமே ஆபத்தில் சிக்குண்டுள்ளது. இத்தகைய சூழலில், இந்தியாவின் அடிப்படைக் கொள்கைகளான மதச்சார்பின்மை, கூட்டாட்சியியல், சமூகநீதி மற்றும் வேற்றுமையில் ஒற்றுமையில் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்ட ஒருவரை ஆதரிப்பதுதான் நம்முன் உள்ள கடமை!

நீட் விலக்கு, கீழடியின் தொன்மையை ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பது, நியாயமான நிதிப் பகிர்வு, கல்வி நிதி விடுவிப்பு உள்ளிட்ட தமிழ்நாட்டின் நியாயமான பல கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்காமல், ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு அநீதி இழைத்து வருகிறது. ஆளுநர்கள் மூலமாக இணை அரசாங்கம் நடத்தி, மாநில அரசுகளின் செயல்பாட்டை முடக்கி, உயர்கல்வி நிறுவனங்களை வலுவிழக்கச் செய்யும் செயல்களிலும் ஈடுபட்டு வருகிறது.

மாநில உரிமைகள் பறிப்பு, அதிகாரக்குவிப்பு, வெறுப்பு பிரசாரம் தீவிரமாக முன்னெடுப்பு, இடைவிடாத இந்தி & சமஸ்கிருதத் திணிப்பு என அரசியலமைப்பைக் குழிதோண்டிப் புதைக்கும் அநீதிகளுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் தி.மு.க. தொடர்ந்து தீவிரமாகக் குரலெழுப்பி வருகிறது.

மாநில உரிமைகளையும் அரசியலமைப்புச் சட்டத்தையும் காக்க, மத நல்லிணக்க உணர்வு கொண்ட தமிழ்நாட்டு மக்கள் அடுத்தடுத்த தேர்தல்களில் தொடர்ந்து தி.மு.கழகக் கூட்டணி எம்.பி., எம்.எல்.ஏ.,க்களுக்கே வாக்களித்துள்ளனர். எனவே, திரு. சுதர்சன் ரெட்டி அவர்களை ஆதரிப்பதுதான் அவர்களது முடிவுக்கும் உணர்வுக்கும் மதிப்பளிப்பதாக அமையும்!

அரசியலமைப்பு, பன்மைத்துவம், சமூகநீதி, மொழியுரிமைகள் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்ட ஜனநாயகவாதியாக, நாடாளுமன்ற மாநிலங்களவையில் ஆக்கப்பூர்வமான விவாதங்களுக்கு இடமளித்து அவையில் எதிர்க்கட்சிகளின் குரல்களுக்கு வாய்ப்பளிக்க கூடியவராக, சுதர்சன் ரெட்டி அவர்கள் திகழ்கிறார்.

கூட்டாட்சியியலுக்கு எதிரான போக்கு, எதேச்சாதிகாரம் மற்றும் வெறுப்புணர்வைப் பரப்புவது ஆகியவற்றை எதிர்த்து நிற்கக் கூடியவராக சுதர்சன் ரெட்டி அவர்கள் மிகச் சரியான தேர்வு!

இவ்வாறு அப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு

# 30 நாள் சிறை வைக்கப்பட்டால் தகுதி நீக்கம் செய்யும் மசோதா!

## எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு!

*புதுடெல்லி, ஆக. 21 -*

அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு 30 நாள் சிறைவைக்கப்பட்டால் தகுதி நீக்கம் செய்யும் மசோதாவை கடுமையாக எதிர்க்கட்சிகள் எதிர்த்தன.

அமைச்சர்கள் கைது செய்யப்பட்டு 30 நாள் சிறைவைக்கப்பட்டால் தகுதி நீக்கம் செய்யும் மசோதாவை ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என அறிவித்திருந்தது.

மழைக்கால கூட்டத் தொடர் இன்று முடிவடையும் நிலையில், தகுதி நீக்கம் செய்யும் மசோதாவை நேற்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

மசோதாவை ஆய்வு செய்ய நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. 5 ஆண்டு தண்டனை கிடைக்கும் குற்ற வழக்குகளில் ஒரு அமைச்சர் கைது செய்யப்பட்டு, 30 நாட்கள் சிறை வைக்கப்பட்டால் அவரது அமைச்சர் பதவி தானாக காலியாகிவிடும் என்று இந்த மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

அமலாக்கத்துறை வழக்குகளால் எதிர்க்கட்சிகளை ஒடுக்கிவரும் பா.ஜ.க. இந்த மசோதா மூலம் மேலும் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது. எனவே, இந்த மசோதாவை நேற்று தாக்கல் செய்யும் போதே இதனை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்தன.

**காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால்!**

காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், முதலமைச்சர்கள், அமைச்சர் மீது எந்த நீதிமன்ற உத்தரவும் இல்லாமல் தகுதி நீக்கம் என்பது அடிப்படை ஜனநாயகத்துக்கும், அரசியல் சாசனத்துக்கும், சட்ட நடைமுறைகளும் எதிரானது என்றும் இது பிளாக்மெயில் மசோதா என்றும் விமர்சித்துள்ளார்.

### நெடுஞ்சாலை – பொதுப்பணித் துறையில்

# பணியில் சேரும் உதவிப் பொறியாளர்களுடன் கலந்துரையாடல்!

## அமைச்சர் எ.வ.வேலு அறிவுரைகள் வழங்கி உரையாற்றினார்!

*சென்னை, ஆக. 21 -*

சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலைத்துறை ஆராய்ச்சி நிலையக் கூட்டரங்கில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் (19.8.2025) புதிதாக பணியில் சேருகின்ற நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப் பணித்துறையை சேர்ந்த உதவிப் பொறியாளர்களுக்கு அவர்களுடைய பணி சிறப்பாக மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கி உரையாற்றினார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ச்சி பெற்று நெடுஞ்சாலைத்துறையில் பணியில் சேருகின்ற 45 உதவிப் பொறியாளர்களையும், பொதுப்பணித்துறையில் பணியில் சேருகின்ற 165 உதவிப் பொறியாளர்களையும், அமைச்சர், வரவேற்று பேசிய உரை வருமாறு:-

இன்று, 91 சகோதரிகள் பொறியாளர்களாகப் பதவி பெற்று பணியை தொடங்குகிறார்கள். “அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு” என்ற நிலைமாறியுள்ளதை நினைக்கும் போது, தந்தை பெரியார் ஞாபகம்தான் வருகிறது. தந்தை பெரியார் வெற்றி பெற்றுள்ளார் என்பதே என்னுடைய எண்ணம்.

“மக்களிடம் செல் அவர்களுடன் வாழ், அவர்களிடம் கற்றுக்கொள் அவர்களை நேசி, அவர்களுக்கு சேவை செய் - அவர்களுக்குத் தெரிந்தவற்றிலிருந்து தொடங்கு, அவர்களிடம் இருப்பதிலிருந்து கட்டமைப்பு செய்” என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். இந்த வழியில்தான் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது அறிவியல், கணிதம் மற்றும் நடைமுறை அறிவு ஆகியவற்றை உள்ளடக்கியதுதான் பொறியியல்.

சிவில் இன்ஜினியரிங் துறையில் கட்டடங்கள் கட்டுவது, குடிநீர் வழங்குவது, சாலை வசதிகள் அமைப்பது, பாசனத்திற்கு அணைகள் கட்டிக் கால்வாய் அமைப்பது போன்ற அனைத்து பணிகளும் மேற்கொள்ள வேண்டும் முதன்முதலாக மனிதன் பொறியியல் துறை மூலம் கண்டறிந்தது சக்கரம்தான்; சக்கரம் உருவானப் பிறகுதான் மனிதனின் உழைப்பு எளிமையானது; பொது மக்களுக்கு தேவையான அனைத்து வளர்ச்சி பணிகளையும் சேவையாக செய்திட அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டதுதான் பொதுப்பணித்துறை என்றும், 2000 ஆண்டுகளுக்கு முன்னரே கட்டப்பட்ட கல்லணை, 1000 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோவில் பல ஆன்மீகத் தலங்கள், தமிழர்களின் பொறியியல் திறமைக்கு சான்றாக விளங்குகிறது.

பொதுப்பணித்துறை, மராமத்துத்துறை என்ற பெயரில்தான் செயல்பட்டு வந்தது. இந்த துறையிலிருந்துதான் மின்சாரத் துறை, நெடுஞ்சாலைத்துறை வீட்டுவசதி வாரியம், குடிமை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், காவலர் வீட்டு வசதி வாரியம் போன்ற பல துறைகள் பிரிந்து சென்றுள்ளன. கடைசியாக நீர்வளத்துறை பிரிந்து சென்றுள்ளது.

1946 ஆம் ஆண்டு, நெடுஞ்சாலைத்துறை உருவாக்கப்பட்டது. பெரும்பாலான துறைகளுக்கு தாய்த் துறை பொதுப்பணித்துறை தான்.

அனைத்து அரசுக் கட்டடங்கள் சாலைகள், பாலங்கள், மேம்பாலங்கள் போன்ற அனைத்து கட்டமைப்புகளை பராமரிப்பதுடன் இயற்கைப் பேரிடர்களிடமிருந்து பாதுகாக்கும் பணியிலும், உதவிப் பொறியாளர்கள் ஈடுபட வேண்டும், பொதுக் கட்டடங்கள், பள்ளிக்கூடங்கள், திரையரங்குகள், தேர்கள் ஆகியவற்றிற்கான உறுதித் தன்மை சான்றிதழ்களை ஆய்வு செய்து வழங்க வேண்டும்.

அனைத்து உதவிப் பொறியாளர்களும் நடைமுறையில் உள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றை நன்கு படித்து, அதன் அடிப்



படையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும், கட்டடங்கள் மற்றும் பாலங்கள் கட்டும்போது, மண்பரிசோதனை, குடிநீர் பரிசோதனை, கட்டுமானப் பொருட்களின் தரம், உப்பு அதிகம் இல்லாத தண்ணீர், சிமெண்ட் மூட்டையின் எடை மற்றும் தரம், மணலின் தூய்மை ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்றும், “தரமே நிரந்தரம்“ என்றும் தரமான கட்டுமானத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

சாலைகள் தரமானதாக இருந்தால்தான், பாதுகாப்பான பயணம், பயணநேரம் குறைவதுடன் எரிபொருள் சிக்கனம், சுற்றுலா வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி போன்ற பல்வேறு நன்மைகள் கிடைக்கும்; நாட்டின் மூலதனத்தை உயர்த்தும் துறையாகப் பொதுப்பணித்துறை விளங்குகிறது. பொதுப்பணித்துறை மூலம் கட்டப்படும் கட்டடங்கள், பாலங்கள் போன்ற அனைத்தும் அரசாங்கத்தின் மூலதனம், இந்த மூலதனங்களை உருவாக்குவது நெடுஞ்சாலைத்துறையும், பொதுப் பணித்துறையும்தான் என்று எடுத்துரைத்தார்.

ஒரு டாக்டரின் சிகிச்சையில் குறைபாடு இருந்தால், அது நோயாளியின் குறைபாடாகதான் இருக்கும்; ஒரு வழக்கறிஞரின் வழக்கு தோல்வியடைந்தால், அதற்கு வழக்கறிஞர் பொறுப்பேற்கமாட்டார்; ஆனால், ஒரு இன்ஜினியரின் கட்டுமானத்தில் குறைபாடு ஏற்பட்டால் இன்ஜினியர்தான் பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 2030இல் தமிழ்நாட்டின் பொருளாதாரம் “ஒரு ட்ரில்லியன் டாலராக விளங்க“ இலக்கு நிர்ணயித்து பணியாற்றி வருகிறார். அண்மையில் ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்கத்துறை வெளியிட்ட பொருளாதார ஆய்வறிக்கையின்படி, 14 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.19% விழுக்காடாக அதிகரித்துள்ளது. தனிநபர் வருமானம் ஓர் ஆண்டுக்கு ரூ.3.6 இலட்சம் என்ற அளவில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. இதே வளர்ச்சி விகிதத்தில் நாம் முன்னேறினால், “தமிழ்நாடு முதலமைச்சர் நிர்ணயித்திருக்கிற ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை“ எளிதாக அடைந்து விடலாம் .

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு பொதுப்பணித்துறையில் 799, நெடுஞ்சாலைத்துறையில் 1016 பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

“உழைப்பவரே உயர்ந்தவர்“என்னும் கொள்கையை மனதில் பதித்து கொண்டு, பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத்ராம் சர்மா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர் தெ.பாஸ்கரபாண்டியன், நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) தலைமைப் பொறியாளர் கு.கோ. சத்தியபிரகாஷ், பொதுப்பணித்துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் எஸ். மணிவண்ணன், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், நெடுஞ் சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறையை சேர்ந்த தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பச்சேரியில் உள்ள விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவு தூணுக்கு தமிழக அரசு சார்பில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்வில் முன்னாள் எம்.பி.தனுஷ் எம்.குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சீனிவாசன், ஒன்றிய செயலாளர்கள் பொன்.முத்தையா பாண்டியன், லாலா சங்கரபாண்டியன், மாநில மருத்துவ அணி துணை செயலாளர் செண்பகவிநாயகம், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி, நகர செயலாளர் பிரகாஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி மேற்கு ஒன்றியம் கீழ்கொத்தூர் ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாம் நடைபெற்றது. வேலூர் மாவட்டச் செயலாளர், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் நேரில் சென்று பார்வையிட்டு “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு முகாம் தொடங்கி வைத்து மனு அளித்த பயனாளிகளுக்குச் சான்றிதழ் வழங்கினார். இதில் மேற்கு ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு, ஒன்றிய கவுன்சிலர்கள் என்.பிரகாஷ், கே.எஸ்.கணபதி, ஊராட்சி மன்ற தலைவர் உதயகுமார், ஊராட்சி செயலாளர் குமரேசன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், பல்வேறு அரசு துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.